**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,திண்டுக்கல்**

**அமர்வு வழக்கு எண்.54/2022**

**அ.சா. 2 – கோபிஆனந்த்**

**நாள்.20-03-2023**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். Crlmp No. 758/2023 மனுவில் 24.02.2023ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் அசா.2 மீண்டும் அழைத்து 1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

**1மற்றும் 2ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆட்டோ டிரைவர் என்பதற்கான அடையாளத்தை போலீஸ்சார் விசாரணை சமயம் கொடுத்துள்ளேன். TN 57 W 6791 என்ற வண்டி ஆட்டோ என்பதற்கான ஆவணத்தை போலீஸ்சார் விசாரணை சமயம் ஆஜர் செய்யவில்லை. ஆட்டோவின் பதிவு எண்ணை முதல் விசாரணையில் தவறாக சொல்லியுள்ளேன். ஆட்டோவின் பதிவு எண். TN 57 W 6197. போலீஸ்சார் விசாணை சமயம் 14.06.2021ம் தேதி மாலை 4.30 மணியளவில் TN 57 W 6197 என்ற ஆட்டோவை நான் ஓட்டிவந்தேன் என்ற விபரத்தை போலீஸ்சார் விசாரணை சமயம் சொல்லியுள்ளேன். எனக்கு கங்காதரனை தெரியும். கங்காதரன் என்னுடைய ஊரைச்சார்ந்தவர். ஒரே சமூகத்தை சார்ந்தவர். எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது. சம்பவ தினம் அன்று நான் ஆட்டோவில் செல்லவில்லை எனவும் , எதிரிகளை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிரி சிரஞ்சீவின் அருகில் நின்று கொண்டுயிருந்ததாக நான் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவரிடம் நான் தான் காயம்பட்ட நபர்களை ஆட்டோவில் ஏற்றி வந்தேன் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன். கங்காதரன் மற்றும் கருப்பையாவை நான் ஆட்டோவில் ஏற்றி வந்தேன். என்னுடைய ஆட்டோவில் நான், கருப்பையா, கங்காதரன் ஆகியோர் மட்டும் மருத்துவமனைக்கு பயணம் செய்தோம்.

**Crlmp No. 858/2023 மனுவில் 03.03.2023ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் அசா.2 மீண்டும் அழைத்து 3 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இறந்த கருப்பை எனக்கு நெருங்கிய உறவினர் அல்ல. தூரத்து உறவினர். ஆட்டோவில் ஏற்றும் பொழுது எனக்கு உதவி செய்ய வெளிநபர்கள் யாரும் இல்லை. என்ன நடந்தது என்ற விபரத்தை கங்காதரனை கேட்டு தெரிந்து கொண்டேன்.

**மறு விசாரணை இல்லை.** /ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.03.20 17:41:04 +0530

Additional District Judge,

Dindigul.